சமஸ்கிருத மயமான ‘வந்தே மாதர’த்திற்கு முதலிடம் தந்து “மீண்டும் தமிழுக்கு மூன்றாமிடமா?”

# தமிழ்நாடு ஒருபோதும் ஏற்கவே ஏற்காது! வன்மையான கண்டனத்திற்குரியது!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

சென்னை, மே 23-

சமஸ்கிருத மயமான ‘வந்தே மாதர’த்திற்கு முதலிடம் தந்து “மீண்டும் தமிழுக்கு மூன்றாமிடமா?” தமிழ்நாடு ஒருபோதும் ஏற்கவே ஏற்காது! இது வன்மையான கண்டனத்திற்குரியது என்று திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார்.



அவரது அறிக்கை வருமாறு:

21.5.2026 அன்று காலை ஜோசப் விஜய் அவர்களது ஆட்சி, தனது அமைச்சரவையின் இரண்டாம் கட்ட விரிவாக்கத்தை அறிவித்து, 23 புதிய அமைச்சர்கள் (காங்கிரஸ் கட்சிக்குத் தந்த இரண்டு அமைச்சர்கள் உள்பட) பதவியேற்பு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

நிகழ்ச்சியின் தொடக்கத்தில், முதலிடம் ‘வந்தே மாதரம்’ பாட்டுக்கு! (சமஸ்கிருத மயமாக்கப் பட்ட வங்காளம்) இரண்டாவது, ‘ஜன கண மன அதி நாயக’ ‘நாட்டுப் பண்’ என்பதைப் பாடி, ‘நீராரும் கடலுடுத்த’ என்ற மொழி வாழ்த்துப் பாடல் மூன்றாம் இடத்திற்குத் தள்ளப்பட்டுள்ளது.

முந்தைய ‘திராவிட மாடல்’ அரசு, தொடர்ந்து கடைப்பிடித்த செம்மொழியாம் எம் மொழி தமிழுக்கு முதலிடம் தந்து, தேசியப் பண் (‘ஜன கண மன’ பாட்டு) சட்டமன்றத்தில் இறுதியில்தான் இசைக்கப்படும் வகையில் நிகழ்வை நடத்தியபோது, அதற்கு அடாவடித்தனம் செய்த, முன்னிருந்த ஆர்.என்.ரவி என்ற ஆளுநரின் போக்கை அனுமதிக்காமல், இந்த உரிமையை அன்றைய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நிலைநாட்டினார்.

தமிழுக்கு நிரந்தரமாக மூன்றாமிடம் என்றாக்கியுள்ளார் பொறுப்பு ஆளுநர்!

சென்றமுறை பதவியேற்பு விழாவின்போது நடைபெற்ற அதே முறை போன்றே, இம்முறையும் இன்றைய பதவியேற்பு விழாவையும் நடத்திக் காட்டி, தமிழுக்கு நிரந்தரமாக மூன்றாம் இடம் என்றாக்கியுள்ளார் பொறுப்பு ஆளுநர் அர்லேகர் - அதனை ஏற்றுக்கொண்டுள்ளது தமிழ்நாடு புதிய அரசு.

முன்பு, இதுபற்றி வன்மையான கண்டனத்தைத் தமிழ்நாட்டில் உள்ள முக்கிய கட்சிகளும், நாமும் எழுப்பிய நிலையில், புதிய முதலமைச்சர் சார்பில், அவரது அமைச்சர்களில் ஒருவரான ஆதவ் அர்ஜுனா அவர்கள் மூலம், “இனிமேல் இப்படி நடக்காது” என்றும், “தமிழ் மூன்றாவது இடத்திற்குத் தள்ளப்படுவதை ஏற்க மாட்டோம்” என்றும் கூறப்பட்ட வாக்குறுதி, இவ்வளவு விரைவில், சில நாள்களிலேயே காற்றில் பறக்கவிடப்படுகிறதா?

### தமிழ்நாட்டிற்குத் தலைக்குனிவு!

இந்த ஆட்சியின் தொடக்கமே தமிழ்நாட்டின் மரபை உடைத்து, சமஸ்கிருதத்தினை முதன் மொழியாக்கி, தமிழை மூன்றாவது இடத்திற்குத் தள்ளிவிட்டு மகிழும் ஆர்.எஸ்.எஸ். - சமஸ்கிருதப் பண்பாட்டுத் திணிப்பை, டில்லி எஜமானத் தனத்திற்கு அடிபணியும் போக்குக்கு இடந்தந்து தமிழ்நாட்டிற்குத் தலைக்குனிவை ஏற்படுத்துவதா?

‘கொள்கை எதிரிகளிடம்’ இப்படி ஒரு சமரசப் போக்கா? இதைத் தமிழ்நாடு ஒருபோதும் ஏற்கவே ஏற்காது! புதிய ஆட்சியின் “நம்பகத்தன்மை” இப்போது இவ்வளவு குறுகிய இடைவெளியில் சந்தேகத்திற்குரிய கேள்விக்குறியாகலாமா?

முன்பு, ஆளுநர் மாளிகையின் ‘லோக் பவன்’ ஏற்பாடு செய்தது என்று ஒரு வகை சமாதானம் கூறப்பட்டது. இப்போது புதிய முதலமைச்சராகியுள்ள ஜோசப் விஜய் அவர்களின் ஆணைப்படி நடக்க வேண்டிய பொதுத் துறை (Public Department) நிகழ்ச்சி தானே! இந்தப் பதவியேற்பு நிகழ்ச்சி நிரல் முறைப்படி, புதிய முதலமைச்சர் ஒப்புதலுடன் தானே நடந்திருக்க வேண்டும்?

### அலட்சியப்படுத்துவது வன்மையான கண்டனத்திற்குரியது!

இது தமிழ்நாட்டு மக்களின் ஒட்டுமொத்தமான உணர்வு பொங்கும், உணர்ச்சிப்பூர்வமான பிரச்சினை - அதனை அலட்சியப்படுத்துவது வன்மையான கண்டனத்திற்குரியது!

இதனைத் தமிழ்நாட்டு மக்களின் எச்சரிக்கையாகக் கொண்டு, பார்க்கத் தவறினால், அதன் பாரதூர விளைவுகளை இவ்வளவு விரைவில் ஏற்கவேண்டிய கட்டாயம் புதிய அரசுக்கு ஏற்படுவது தவிர்க்க முடியாதது.

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# 8,000 ஊழியர்களை பணிநீக்கம் செய்தது ‘மெட்டா’ நிறுவனம்!

## பேரதிர்ச்சியில் ஊழியர்கள்!

புதுடெல்லி, மே 23 -

மெட்டா ஊழியர்களுக்கு நேற்று முன்தினம் இன்று அனைவரும் வீட்டில் இருந்தே பணிபுரியுங்கள்’ என்ற ஒரு சாதாரண உத்தரவுடன் தொடங்கியது. அமெரிக்கா, பிரிட்டன் உள்ளிட்ட பல்வேறு பிராந்தியங்களில் உள்ள ஊழியர்கள் அலுவலகத்திற்கு வர வேண்டாம் என்று மெட்டா நிறுவனம் அறிவித்தது.

இதனால் அவற்றின் வளாகங்களில் மக்கள் கூட்டம் இல்லை; அலுவலக அறைகளில் அரட்டைகள் இல்லை; வளாகத்தின் தாழ்வாரங்களில் ஊழியர்களின் பரபரப்பான நடமாட்டமும் இல்லை.

அதன் தொடர்ச்சியாக, ஊழியர்களின் மின்னஞ்சல் பெட்டிகளுக்கு அடுத்தடுத்து செய்திகள் வரத் தொடங்கின. மெட்டா பிளாட்பார்ம்ஸ் நிறுவனம், தனது ஒட்டு மொத்தப் பணியாளர்களில் சுமார் 10 சதவீதம் ஊழியர்களை (8,000) பணிநீக்கம் செய்யும் நடவடிக்கையைத் தொடங்கியுள்ளது.

இதற்கான முதல் அறிவிப்பு, சிங்கப்பூரில் உள்ள அதன் முக்கிய மையத்திலிருந்து வெளியானது.

சிங்கப்பூர் உள்ளூர் நேரப்படி அதிகாலை 4 மணிக்கு (இந்திய நேரப்படி நள்ளிரவு 1:30 மணி) பணிநீக்கம் செய்யப்பட்ட ஊழியர்களுக்கு மின்னஞ்சல்கள் அனுப்பப்பட்டதாக ‘புளூம்பெர்க்’செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

உலகளாவிய நேர மண்டலங்களுக்கு ஏற்ப, அடுத்தடுத்த கட்டங்களாக இந்த பணி நீக்க அறிவிப்புகள் ஊழியர்களுக்கு அனுப்பப்பட்டு வருகின்றன.

முதலில் வீட்டில் இருந்தே பணி செய்ய உத்தரவிட்டு, அதைத் தொடர்ந்து பணிநீக்க நடவடிக்கையை மேற்கொண்ட மெட்டாவின் இந்த உத்தி ஐ.டி. உலகில் பெரும் விவாதத்தைக் கிளப்பியுள்ளது.

இதன் பின்னணியில் செயற்கை நுண்ணறிவு மறுசீரமைப்பு நடவடிக்கைகள் இருப்பதாக கூறப்படுகிறது.

இந்த பணிநீக்க நடவடிக்கைக்கு முன்பு மெட்டா நிறுவனத்தில் சுமார் 78,000 ஊழியர்கள் பணியாற்றி வந்தனர்.

இந்த நிலையில்தான் தற்போது ஆயிரக்கணக்கானோர் பணிநீக்கம் செய்யப்பட்டு வருகின்றனர்; மேலும் பல ஆயிரம் ஊழியர்கள் வேறு பிரிவுகளுக்கு மாற்றப்பட்டு வருகின்றனர்.

### 6000 காலி இடம் முடக்கம்!

இதுகுறித்து அந்நிறுவனத்தின் முதன்மை மனிதவள அதிகாரி ஜானெல்லே கேல் ஊழியர்களுக்கு அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளதாவது:

7,000 ஊழியர்கள் செயற்கை நுண்ணறிவு சார்ந்த புதிய குழுக்களுக்கு மாற்றப்படுவார்கள். காலியாக இருந்த சுமார் 6,000 பணியிடங்கள் முடக்கப்பட்டுள்ளன.

மேலாண்மை நிலைகளில் உள்ள அதிகாரிகளின் அடுக்குகள் குறைக்கப்படுகின்றன. மேலும், குறைந்த எண்ணிக்கையிலான ஊழியர்களைக் கொண்ட சிறிய குழுக்கள் மூலம், மிக விரைவாகவும் தன்னாதிக்கத்துடனும் செயல்படக்கூடிய எளிய நிறுவனக் கட்டமைப்பை நோக்கி நாம் நகர்ந்துள்ளோம்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.




10, 12ம் வகுப்பு பொதுத் தேர்வில் கடந்த 5 ஆண்டுகளில் தொடர்ந்து படிப்படியாக அதிகரித்த தேர்ச்சி விகிதம்




# தி.மு.க. இளைஞர் அணி

## மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம்

இளைஞர் அணிச் செயலாளர் **உதயநிதி ஸ்டாலின்** அறிவிப்பு

கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம், வருகிற 23.05.2026 சனிக்கிழமை மாலை 5 மணியளவில் அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கத்தில் துணைச் செயலாளர்கள் முன்னிலையில், **கழகத் தலைவர்** அவர்களின் சிறப்புரையுடன் நடைபெற உள்ளது. இந்தக் கூட்டத்தில், மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**பொருள்**

- ஜூன் 3, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள்
- கழக இளைஞர் அணி ஆக்கப் பணிகள்

அன்பகம்
தேனாம்பேட்டை
சென்னை–18

நாள் : 18-05-2026

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி





நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் நாமக்கல் முல்லை நகரில் உள்ள மாவட்ட அலுவலகமான கலைஞர் அறிவாலயம் பேராசிரியர் கூட்டரங்கில் நடைபெற்றது. கூட்டத்தில் நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழக செயலாளரும் மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் மாவட்ட அவை தலைவர் சி.மணிமாறன், முன்னாள் அமைச்சர் டாக்டர் மா.மதிவேந்தன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் ராமலிங்கம், இராமசுவாமி மற்றும் மாநில, மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் தி.மு.க. செயலாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருக்கு வாழ்த்துக்கள்!

# முத்தமிழறிஞர் கலைஞர் 103வது பிறந்தநாள் விழா! மாவட்டம் முழுவதும் நலத்திட்ட உதவிகள் வழங்கப்படும்!

## நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம்!

நாமக்கல், மே 23 -

நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் நாமக்கல் முல்லை நகரில் உள்ள மாவட்ட அலுவலகமான கலைஞர் அறிவாலயம் பேராசிரியர் கூட்டரங்கில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்ட அவை தலைவர் சி.மணிமாறன் தலைமை தாங்கினார்.

முன்னாள் அமைச்சர் டாக்டர் மா.மதிவேந்தன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் ராமலிங்கம், இராமசுவாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழக செயலாளரும் மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என். இராஜேஸ்குமார் கலந்து கொண்டு சிறப்புரை யாற்றினார். இதில் மாநில, மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் திமுக செயலாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில், முன்னாள் முதல்வர் கலைஞரின் 103 வது பிறந்தநாளை முன்னிட்டு வரும் ஜூன் 3ஆம் தேதி நாமக்கல் கிழக்கு மாவட்டம் முழுவதும் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்குதல், பள்ளி மற்றும் அங்கன்வாடி குழந்தைகளுக்கு நோட்டு புத்தகங்கள் வழங்குதல், ஏழை எளிய மக்களுக்கும் முதியோர் களுக்கும் உணவு வழங்குதல் உள்ளிட்ட நலத்திட்ட பணிகளை ஒன்றிய, நகர மற்றும் பேரூர் பகுதிகளில் மேற்கொள்ளவது,

மேலும், ஜூன் 3ஆம் தேதி காலை 8.30 மணிக்கு பரமத்தி சாலையில் உள்ள டாக்டர் கலைஞரின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து இனிப்பு வழங்கி பிறந்தநாள் விழாவை சிறப்பாகக் கொண்டாடுவது. அதே போல், தமிழ்நாடு சட்டப் பேரவைக்கான 17வது தேர்தலில் திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக்கு வாக்களித்த நாமக்கல், ராசிபுரம் மற்றும் சேந்தமங்கலம் தொகுதி மக்களுக்கு நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் நன்றி தெரிவிக்கப்பட்டது.

தேர்தலில் சிறப்பாக பணியாற்றிய கழக நிர்வாகிகள், தொண்டர்கள் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகளுக்கும் பாராட்டு தெரிவித்துக் கொள்வது. மேலும், திமுக இளைஞரணி செயலாளரும், முன்னாள் துணை முதல்வருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களை தமிழ்நாடு சட்டப்பேரவையின் எதிர்க்கட்சித் தலைவராக கழகத் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை தேர்வு செய்த கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்வதுடன் எதிர்க்கட்சித் தலைவருக்கு வாழ்த்து தெரிவிப்பதுடன், எதிர்க்கட்சித் தலைவரின் பணிகளுக்கு நாமக்கல் கிழக்கு மாவட்ட கழகம் என்றும் உறுதுணையாக இருக்கும் உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

## ஈரானுடனான பேச்சுவார்த்தை இறுதிக்கட்டத்தில் உள்ள நிலையில்

# டிரம்ப் மீண்டும் மிரட்டல்; ஈரான் பதிலடி!

## மத்திய கிழக்கில் மீண்டும் போர் பதற்றம்

வாஷிங்டன், மே 22-

ஈரானுடனான பேச்சுவார்த்தை இறுதிகட்டத்தில் உள்ள நிலையில் டிரம்ப் மீண்டும் மிரட்டல் தொனியில் பேசியுள்ளார். இதற்கு ஈரான் பதிலடி கொடுத்துள்ளது. இதனால் மத்திய கிழக்கில் மீண்டும் போர் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

ஈரான் அணு உலைகளை அழிப்பது. அதி நவீன பாலிஸ்டிக் ஏவுகணைகள் மற்றும் ட்ரோன் தளங்களை முடக்குவது, ஹார்முஸ் ஜலசந்தி’ கடல்வழியை முடக்கியதால், அதைத் தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவது உள்ளிட்டவற்றை மையமாக வைத்து அந்நாட்டின் மீது அமெரிக்கா, இஸ்ரேல் இணைந்து போர் நடத்தி வருகிறது. தற்போது, இந்த போர், கடந்த சில வாரங்களாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ள நிலையில், தாக்குதல்களை மீண்டும் தொடங்குவது குறித்து இரு தரப்பினரும் பரஸ்பரம் அச்சுறுத்தல்களை விடுத்து வருகின்றன. இதனால் அமைதியற்ற சூழல் நிலவுகிறது.

இந்நிலையில், வாஷிங்டனில் அதிபர் டிரம்ப் நிருபர்களிடம் கூறுகையில், ‘ஈரானுடனான மோதலை முடிவுக்கு கொண்டுவரும் ஒப்பந்தம் விரைவில் எட்டப்படலாம். அதற்கு முன்பாக, அந்த ஒப்பந்தத்தில் விரைவில் கையெழுத்திட வேண்டும். தவறினால் அமெரிக்கா புதிய தாக்குதல்களை தொடுக்கக்கூடும். கட்டாயமாக ஈரான் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும். தற்போது நடந்து வரும் பேச்சுவார்த்தை தோல்வியுற்றால் ஈரானுக்கு எதிராக அமெரிக்கா கடுமையான நடவடிக்கை எடுக்கக்கூடும்.

ஈரான் விவகாரத்தில் நாம் இறுதிக் கட்டத்தில் இருக்கிறோம். இந்த நிலைமை முடிவடையலாம் அல்லது மேலும் மோசமடையலாம். நாங்கள் சற்று விரும்பத்தகாத சில காரியங்களை செய்வோம், ஆனால் அப்படி நடக்காது என்று நம்புகிறேன். நாம் சென்று இதை முடித்து வைக்க போகிறோமா அல்லது அவர்கள் ஓர் ஆவணத்தில் கையெழுத்திட போகிறார்களா என்பதுதான் ஒரே கேள்வி என்ன நடக்கிறது என்று பார்ப்போம். இந்த விவகாரத்தில் நான் சொல்வதைத்தான் நெதன்யாகு செய்வார்’ என்றார்.